# ஹாஜிகளுக்கு மூன்று உத்தரவாதங்கள்!

## ஹாஜிகளுக்கு மூன்று உத்தரவாதங்கள்!

1. பாவங்கள் மன்னிக்கப்படும்
2. துஆக்கள் அங்கீகரிப்படும்
3. சுவர்க்கம் பரிசாகக் கிடைக்கும்

### 1. பாவங்கள் மன்னிக்கப்படும்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: உடலுறவு கொள்ளாமல்,பாவங்கள் செய்யாமல் யாரேனும் ஹஜ்ஜு செய்தால், அவர் அன்று பிறந்த பாலகனைப் போன்று(பாவங்கள் மன்னிக்கப்பட்டு மனிதப் புனிதனாக) திரும்புகிறார்.
அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்:-புகாரி,முஸ்லிம்)

இஸ்லாத்தை ஏற்க முன்வந்த அம்ரு இப்னுல் ஆஸ்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், என்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதாயின் பைஅத் (உறுதி மொழி) எடுக்கிறேன் என நிபந்தனையிட்டார்கள்.

'அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாத்தை ஏற்பது அதற்கு முன்னுள்ள பாவங் களைத் தகர்த்து விடுகிறது. ஹிஜ்ரத் செய்வது அதற்கு முன்னுள்ள பாவங்களை தகர்த்துவிடுகிறது. ஹஜ்ஜு செய்வது அதற்கு முன்னுள்ள பாவங்களை தகர்த்து விடுகிறது.(அழித்து விடுகிறது) என்பதை நீர் அறியவில்லையா? என்று கேட்டார்கள். அறிவிப்பவர் : அம்ரு பின் ஆஸ் (ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்: முஸ்லிம்)

### 2. துஆக்கள் அங்கீகரிப்படும்.

ஹஜ்ஜை நிறைவேற்றுவோர்,உம்ரா செய்வோர்,அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவோர் ஆகிய மூவரும் அல்லாஹ்வின் விருந்தினராவர். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்:-இப்னு ஹிப்பான், இப்னு மாஜா)

ஹாஜ் செய்வோரும்,உம்ரா செய்வோரும் அல்லாஹ்வின் விருந்தினராவர். அவர்கள் அவனிடம் (கேட்டுப்)பிரார்த்தனை செய்தால் அவர்களுக்கு அவன் பதிலளிக்கிறான். பாவமன்னிப்புக் கேட்டால் அவர்களை அவன் மன்னிக்கிறான்.
(அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்:- நஸயீ,இப்னு ஹிப்பான்)

### 3. சுவர்க்கம் பரிசாகக் கிடைக்கும்

ஹஜ்ஜுன் மப்ரூர் ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜு க்கு சுவர்க்கத்தைத் தவிர வேறு பரிசு இல்லை. என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: நஸாயீ திர்மிதி)

அல்லாஹ்வின் தூதரே! நாயகமே ஜிஹாத் செய்வதையே சிறந்த வணக்கமாகக் கருதுகிறீர்கள். எனவே (பெண்களாகிய)நாங்களும் ஜிஹாத் செய்யலாமா? என்று கேட்டேன். அதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'பெண்களாகிய உங்களுக்குச் சிறந்த ஜிஹாத் ஹஜ்ஜுன் மப்ரூர் ஒப்புக்கொள்ளப்பட்ட  ஹஜ்ஜு என்று கூறினார்கள்.

(அறிவிப்பவர்: ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா)

**ஆதாரம்: புகாரி,முஸ்லிம்)**

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**